THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes Sir.

(b) For further extension of electric supply, a loan of Rs. 9,97,860 was disbursed to this licensee during 1960–61. During 1961–62 another loan of Rs. 15,24,634 was disbursed to this licensee for rural electrification. The question of granting a further loan to this licensee during 1962–63 is also under consideration. Apart from granting loans to the licensees for developing the underdeveloped area in their areas, the Government have also issued a direction to the Madras State Electricity Board that the policy to be followed by the Electricity Board should be that it should operate in the undeveloped areas within the areas of supply of the licensees with a view to the rational development of electricity in those areas.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், இந்த லைசென்சி பகுதிகளில் மின்சாரம் சரியாக விஸ்தரிக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் லோன் குறைவாக இருக்கும் காரணத்தால், இந்தக் கம்பெனிகளை எடுத்துக்கொள்கிற சட்டங்களின் கீழ் எடுத்துக்கொண்டு மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு மூலமாக அதிகமான அளவுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க அரசாங்கம் உடனடியாக முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வாறு எலக்ட்ரிசிடி “ அண்டர் டேகிங்ஸை ” எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய 10 கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் வேண்டும். அந்தப் பத்து கோடி ரூபாயைச் செலவழித்து இன்னும் எலக்ட்ரிசிடியை விஸ்தரிப்பதா, அல்லது லைசென்சி வைத்திருக்கும் இடங்களை எடுத்துக் கொள்வதா என்பது கொள்கை பூர்வமாக முடிவு செய்யவேண்டியதாகும். ராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரை அவர்களுக்கு லோன் கொடுத்து விஸ்தரிப்பதுதான் நல்லது, பத்து கோடி ரூபாய் வரை அவர்களுக்குக் “ காம்பன்சேஷன் ” கொடுத்துவிட்டு எடுத்துக் கொள்வது நல்லதல்ல என்று நினைக்கிறோம்.

கிராமங்களுக்கு மின்சார வசதி

* 289 கேள்வி.—திரு. எஸ். மாதவன் : (திரு. கோ. சி. மணி அவர்கள் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆடுதுறை தொகுதியில் (i) மின்சார வசதி உள்ள கிராமங்கள், (ii) வசதி இல்லாத கிராமங்கள் எத்தனை? அங்கு வசதி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) Number of villages electrified in the Aduthurai Constituency—55.

(ii) Number of villages not electrified—51.

Out of 51 villages which have not been electrified so far, action is being taken to electrify 14 villages.

* 290 கேள்வி.—திரு. எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் பெரம்பலூர் தாலுகாவில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) மேற்கொண்டு எத்தனை கிராமங்களுக்கு வசதி செய்து கொடுக்க உத்தேசம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Seven villages.

(b) Ten more villages during 1962.